நாகப்பட்டினம் நகராட்சி

## 2024-ம் ஆண்டு ஜனவரி மாதம் -12-ம் நாள் வெள்ளிக் கிழமை காலை 11..30 மணியளவில நட□ பெற்□ நகரமன□ சாதாரண கூட□ நட□ வடிக்கையின தீர்மான நகல்

| கூட்ட நடைபெற்ற நாள் | வரிசை எண் மற்றும் மன்ற கூட்ட பொருள்களின் விபரம் | தீர்மான எண் |
|---|---|---|
| 12-01-2024 | பொருள் எண்.1 | தீர்மானம் எண். 1<br>அ.கு<br>பதிவுசெய்யப்பட்□து |

பொருள் எண்.1

நாகப்பட்டினம் நகராட்சி ஆணையர் அவர்களின் டிசம்பர் 2023-ஆம் மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும்

| அலுவலககுறிப்பு | 1 | மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம். |
|---|---|---|

ந.க.எண். 2023/சி1

| கூட்ட நடைபெற்ற நாள் | பொருள் | தீர்மான எண் |
|---|---|---|
| 12-01-2024 | பொருள் எண்.2 | தீர்மானம் எண்.2<br>அ. கு<br>அனுமதிக்கப்பட்டது |

பொருள் எண்.2

நாகப்பட்டினம் நகராட்சி எல்லைக்குட்பட்ட 36 வார்டுகளில் அவ்வபோது ஏற்படுகிற பிறப்பு மற்றும் இறப்பு நிகழ்வுகளை நகராட்சியில் பதிவு செய்து தொடர்புடையவர்களுக்கு சான்றுகள் வழங்கப்பட்டு வருகிறது. அதன்படி கீழ்கண்ட பட்டியலில் கண்டுள்ள விவரங்கள் படி பிறப்பு மற்றும் இறப்பு நிகழ்வுகளின் பதிவு செய்யப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது. 01.12.2023 ஆம் தேதி முதல் 31.12.2023 தேதி வரை நடைபெற்ற பிறப்பு இறப்பு பட்டியல்

**01.12.2023 முதல் 30.12.2023**

| வ.எண் | பிறப்பு, இறப்பு பதிவு பிரிவு | பிறப்பு பதிவு விபரம் | இறப்பு பதிவு விபரம் |
|---|---|---|---|
| 1 | கோட்டம் – I | -- | 7 |
| 2 | கோட்டம் – II | 68 | 16 |
| 3 | கோட்டம் – III | 42 | 3 |
| 4 | கோட்டம் – IV | 27 | 19 |
| | **கூடுதல்** | **137** | **45** |

| அலுவலககுறிப்பு | 1 | மன்றம் அனுமதி வழங்கலாம் |
|---|---|---|

ந.க.எண்.

| கூட்ட நடைபெற்ற நாள் | பொருள் | தீர்மான எண் |
|---|---|---|
| 12-01-2024 | பொருள் எண்.3 | தீர்மானம் எண்.3<br>அ. கு<br>அனுமதிக்கப்பட்டது |

பொருள் எண்.3

நாகப்பட்டினம் நகர எல்லைக்குட்பட்ட பகுதிகளில் 36 வார்டுகளில் பொதுசுகாதாரம் பணியின் கீழ் கொசுவின் தாக்கத்தை கட்டுபடுத்த கொசு ஒழிப்பு பணிக்கு தேவையான கைதெளிப்பான் இயந்திரம் (pulse fogging machine) 10 எண்ணம் மற்றும் Indoor Fogging Machine 10 எண்ணம் தருவித்துக் கொள்வதற்கு பணியின் அவசரம் அவசயத்தை கருதி நகராட்சியின் பொதுநிதியில் ரூ. 11,00,000 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்வதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| அலுவலககுறிப்பு | 1 | மன்றம் அனுமதி வழங்கலாம் |
|---|---|---|

ந.க.எண்.5008/2023/எச்.1

| கூட்ட நடைபெற்ற நாள் | பொருள் | தீர்மான எண் |
|---|---|---|
| 12-01-2024 | பொருள் எண்.4 | தீர்மானம் எண்.4<br>அ. கு<br>அனுமதிக்கப்பட்டது |

பொருள் எண்.4

நாகப்பட்டினம் மாவட்ட தலைநகரில் நமது நகராட்சி சுமார் 10 ஆண்டுகளாக தேர்வுநிலை நகராட்சியாக சிறப்புடன் செயல்பட்டு வருகிறது. இந்நகராட்சி 36 வார்டுகள், 14.92 ச.கிலோ மீட்டர் பரப்பளவு மற்றும் நீளம் 123.274 கிலோ மீட்டரில் அளவாகியுள்ள இந்நகராட்சியில் பல்வேறு திட்டப்பணிகள் நாளது தேதிவரை சிறப்புடன் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில் அனைத்து பிரிவுகளிலும் தட்டச்சு, புள்ளிவிபரக் குறிப்புகள் மற்றும் பிறப்பு, இறப்பு பதிவுகள் தினந்தோறும் இணையத்தில் பதிவேற்றம் செய்ய வேண்டியுள்ளதால் 3 தட்டச்சர் பதவி நாளது தேதிவரை காலியாக

உள்ள நிலையில் தட்டச்சு செய்வதற்கும் புள்ளி விவரக்குறிப்புகள் பதிவேற்றம் செய்யவதற்கும் இயலாத நிலையில், பணியின் அவசர அவசியத்தைக் கருதி முழுவதும் ஒப்பந்த அடிப்படையில் (out soursing) மாவட்ட ஆட்சித்தலைவரின் செயல்முறை ஆணை ந.க.எண்.6721/2023/ஈ.1 நாள். 20–06–2023 ல் நிர்ணயம் செய்யப்பட்ட விலை விகிதத்தின்படி நாள் ஒன்றுக்கு ஒரு தினக்கூலி பணியாளருக்கு ரூ.500 வீதம் ஊதியம் வழங்கவும், 01–10–2023 ஆம் தேதி முதல் தொடர்ந்து 6 மாதத்திற்கு பணிமர்த்தி கொள்ளவதற்கும் அதற்கு உத்தேச செலவீனம் ஒரு மாதத்திற்கு ரூ.1.35 இலட்சம் மற்றும் E.P.F.24% ஆக கூடுதல் ரூ.1.67/– இலட்சத்தை நகராட்சி பொதுநிதியில் மேற்கொள்ளவும் பணியின் அவசர அவசியத்தைக்கருதி நகர்மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்றத்தலைவரின் அனுமதி பெற்று 01–10–2023 ஆம் தேதி முதல் பணிபுரியும் பணியாளர்களுக்கு ஊதியம் வழங்குவதற்கும் ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| அலுவலககுறிப்பு | | |
|---|---|---|
| | 1 | மன்றம் அனுமதி வழங்கலாம் |
| | 2 | பணியின் அவசர அவசியத்தைக்கருதி நகர்மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்றத் தலைவரின் அனுமதி பெற்று 01–10–2023 ஆம் தேதி முதல் பணிபுரியும் பணியாளர்களுக்கு ஊதியம் வழங்குவதற்கும் ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றம் அங்கீகரிக்கலாம். |

ந.க.எண்.4765/2023/எச்.1

12–01–2024

பொருள் எண்.5

தீர்மானம் எண்.5
அ, கு
அனுமதிக்கப்பட்டது

நாகப்பட்டினம் நகராட்சியில் தட்டச்சு, புள்ளிவிபரக் குறிப்புகள், மற்றும் பிறப்பு, இறப்பு பதிவுகள் தினந்தோறும் இணையதளத்தில் அவ்வப்போது பதிவேற்றம் செய்வதற்கும் முழுவதும் ஒப்பந்த அடிப்படையில் தகுதிவாய்ந்த தினக்கூலி பணியாளர்களால் பணிகள்மேற்கொள்வதற்கு 27–12–2023 ஆம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டுள்ள விவரப்படி இரண்டு ஒப்பந்தபுள்ளிகள் மட்டும் வரப்பெறப்பட்டதன் விவரம் பின்வருமாறு.

| வ. எண். | ஒப்பந்தக்காரரின் பெயர் மற்றும் முகவரி | பணியின் விவரம் | மதிப்பிட்டு விலை விகிதம் |
|---|---|---|---|
| 1. | திரு. பி. ரகுநாதன் ஒப்பந்தக்காரர், நாகப்பட்டினம் 611001. | தட்டச்சு, புள்ளி விபரக்குறிப்புகள், மற்றும் பிறப்பு, இறப்பு பதிவுகள் தினந்தோறும் இணையதளத்தில் பதிவேற்றம் செய்வதற்கும் முழுவதும் ஒப்பந்த அடிப்படையில் தகுதிவாய்ந்த தினக்கூலி பணியாளர்களால் பணிகள் மேற்கொள்ளுதல் பணி | ரூ.499/– (E.P.F.24% நீங்கலாக) |
| 2. | திரு.ஜி.கோபாலகிருஷ்ணன் ஒப்பந்தகாரர், நாகப்பட்டினம் 611001. | | ரூ.510/– ( E.P.F.24% நீங்கலாக) |

மேற்கண்ட விபரப்படி வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வ.எண்.1 ல் கண்டுள்ள திரு. பி. ரகுநாதன் ஒப்பந்தக்காரர் ரூ. 499/– க்கு ( E.P.F.24% நீங்கலாக ) கொடுக்கப்பட்டுள்ள விலை விகிதத்தை ஏற்க பணியின் அவசர அவசியத்தை கருதி நகர்மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவரின் அனுமதி பெற்று விநியோக ஆணை வழங்கியதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| அலுவலககுறிப்பு | | |
|---|---|---|
| | 1 | மன்றம் அனுமதி வழங்கலாம். |
| | 2 | பணியின் அவசர அவசியத்தை கருதி நகர்மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகர் மன்ற தலைவரின் அனுமதி பெற்று விநியோக ஆணை வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம். |

ந.க.எண்.4765/2023/எச்.1

12–01–2024

பொருள் எண்.6

தீர்மானம் எண்.6
அ, கு
அனுமதிக்கப்பட்டது

நாகப்பட்டினம் வீரமுத்து படையாச்சி தெருவை சேர்ந்த திரு. ஆர். விஜயன் என்பவருக்கு தமிழ்நாடு மீன் வளர்ச்சி கழகத்தின் மூலம் மீன் விற்பனை அங்காடி அமைப்பதற்கு நம்பியார் நகர் செல்லும் சாலையில் வார்டு எண். 4, பிளாக் எண்.61, நகரளவு எண்.2958 ல் இடம் ஒதுக்கீடு செய்து அனுமதி வழங்கிட கேட்டு வரப்பெற்ற

| | | |
|---|---|---|
| | தமிழ்நாடு மீன் வளர்ச்சி கழகத்தின் தலைவர் அவர்களின் கடிதம் மன்றத்தின் பார்வைக்கு.<br>அலுவலககுறிப்பு — 1 மன்றம் அனுமதி வழங்கலாம்<br>ந.க.எண். | |
| 12-01-2024 | பொருள் எண்.7<br>நாகப்பட்டினம் நகராட்சிக்குட்பட்ட நாகூர் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள பாதாள சாக்கடை ஆங்காங்கே அடைப்புகள் ஏற்பட்டு குழாய் கசிவு ஏற்படுவதை தவிர்த்து அவற்றை சரிசெய்து சுகாதார கேடுகளை தடுக்கவும், மேலும் பாதாளசாக்கடை கழிவு நீரேற்று நிலையங்களில் அவ்வப்போது பழுதுநீக்கம் செய்யப்பட்ட மின் மோட்டார்களை பொறுத்தும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.4.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலககுறிப்பு — 1 மன்றம் அனுமதி வழங்கலாம்<br>2 மேற்படி பணிக்கு உண்டான செலவினத்தை நகராட்சியின் நிதிநிலையினை கருத்தில் கொண்டு பாதாள சாக்கடை நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்<br>ந.க.எண். /2023/இ1 | தீர்மானம் எண்.7<br>அ, கு<br>அனுமதிக்கப்பட்டது |
| 12-01-2024 | பொருள் எண்.8<br>நாகப்பட்டினம் நகராட்சிக்குட்பட்ட நாகப்பட்டினம் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள பாதாள சாக்கடை ஆங்காங்கே அடைப்புகள் ஏற்பட்டு குழாய் கசிவு ஏற்படுவதை தவிர்த்து அவற்றை சரிசெய்து சுகாதார கேடுகளை தடுக்கவும், மேலும் பாதாளசாக்கடை கழிவு நீரேற்று நிலையங்களில் அவ்வப்போது பழுதுநீக்கம் செய்யப்பட்ட மின் மோட்டார்களை பொறுத்தும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.4.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது<br>அலுவலககுறிப்பு — 1 மன்றம் அனுமதி வழங்கலாம்<br>2 மேற்படி பணிக்கு உண்டான செலவினத்தை நகராட்சியின் நிதிநிலையினை கருத்தில் கொண்டு பாதாள சாக்கடை நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்<br>ந.க.எண். /2023/இ1 | தீர்மானம் எண். 8<br>அ, கு<br>அனுமதிக்கப்பட்டது |
| 12-01-2024 | பொருள் எண்.9<br>நாகப்பட்டினம் நகராட்சியில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2022-23ன் கீழ் கட்டி முடிக்கப்பட்ட பாரதி மார்க்கெட் அங்காடி கட்டிடத்தில் மதிப்பீடு இல்லாத கூடுதல் பணிகளை மேற்கொள்ளும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ. 2 .00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலககுறிப்பு — 1 மன்றம் அனுமதி வழங்கலாம்<br>2 மேற்படி பணிக்கு உண்டான செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்<br>ந.க.எண். /2023/இ1 | தீர்மானம் எண்.9<br>அ, கு<br>அனுமதிக்கப்பட்டது |
| 12-01-2024 | பொருள் எண்.10<br>நாகப்பட்டினம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 20ல் பெருமாள் மேல வடம்போக்கி தெருவில் புதிதாக அமைக்கப்பட்ட சிறுபாலத்தின் அருகில் இணைப்பாக மற்றொரு சிறுபாலம் அமைக்கும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.1.10 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலககுறிப்பு — 1 மன்றம் அனுமதி வழங்கலாம்<br>2 மேற்படி பணிக்கு உண்டான செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து | தீர்மானம் எண்.10<br>அ, கு<br>அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | \| \| மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்<br>ந.க.எண். /2023/இ1 | |
| 12-01-2024 | பொருள் எண்.11<br>நாகப்பட்டினம் நகராட்சிக்குட்பட்ட பழைய நம்பியார் நகர் பகுதியில் உள்ள பள்ளிக்கு செல்லும் சாலை மிகவும் பழுதடைந்துள்ளது அதனால் பொதுமக்களுக்கும் போக்குவரத்திற்கும் இடையூராக உள்ளதால் அதனை சீர்செய்யும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.7.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு<br>1 மன்றம் அனுமதி வழங்கலாம்<br>2 மேற்படி பணிக்கு உண்டான செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்<br>ந.க.எண். /2023/இ1 | தீர்மானம் எண்.11<br>அ. கு<br>அனுமதிக்கப்பட்டது |
| 12-01-2024 | பொருள் எண்.12<br>நாகப்பட்டினம் நகராட்சி பாதாள சாக்கடை திட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள கழிவு நீரேற்று நிலையங்கள் மற்றும் manhole ஆகியவற்றில் நீண்ட காலமாக வண்டல் (silt) படிந்து அவற்றை அகற்ற இயலாத காரணத்தினால் ஆங்காங்கு அடைப்புகள் ஏற்பட்டு கழிவுநீர் manhole இருந்து வெளியாகி பொது சுகாதாரகேடு விளைவிக்கிறது. ஆகையால் கழிவு நீரேற்று நிலையக் கிணறுகள் மற்றும் அதிகப்படியாக வண்டல் மண் படிந்துள்ள manhole களிலிருந்து வண்டல் மண்ணை அகற்றும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.5.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு<br>1 மன்றம் அனுமதி வழங்கலாம்<br>2 மேற்படி பணிக்கு உண்டான செலவினத்தை நகராட்சியின் நிதிநிலையினை கருத்தில் கொண்டு பாதாள சாக்கடை நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்<br>ந.க.எண். /2023/இ1 | தீர்மானம் எண்.12<br>அ. கு<br>அனுமதிக்கப்பட்டது |
| 12-01-2024 | பொருள் எண்.13<br>நாகப்பட்டினம் நகராட்சிக்குட்பட்ட பகுதியிலுள்ள ஆயுதப்படை காவலர் குடியிருப்பு வளாகத்தின் அருகில் குடியிருப்பிலிருந்து வெளிவரும் கழிவுநீர் அதிக அளவு manhole இருந்து வெளியேறுவதால் அப்பகுதியில் பொது சுகாதாரக்கேடு விளைவிக்கிறது. அதனை நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியர் மற்றும் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களின் ஆய்வுக்கூட்ட நடவடிக்கைக்காக உடன் சீர்செய்ய அறிவுறுத்தப்பட்டது. அதனைத்தொடர்ந்து manhole இருந்து புதிதாக பைப் லைன் அமைத்து அருகில் உள்ள lifting manhole வழியாக கழிவுநீரை வெளியேற்றும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.5.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு<br>1 மன்றம் அனுமதி வழங்கலாம்<br>2 மேற்படி பணிக்கு உண்டான செலவினத்தை நகராட்சியின் நிதிநிலையினை கருத்தில் கொண்டு பாதாள சாக்கடை நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்<br>ந.க.எண். /2023/இ1 | தீர்மானம் எண்.13<br>அ. கு<br>அனுமதிக்கப்பட்டது |

<table>
<tr>
<td>12–01–2024</td>
<td>பொருள் எண்.14<br>நாகப்பட்டினம் நகராட்சி நாகப்பட்டினம் மாவட்டத்தின் தலை நகரில் தேர்வு நிலை நகராட்சியாகும். நாகப்பட்டினம் நகராட்சி 36 வார்டுகள் உள்ளது. 2011ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 102813 நாகப்பட்டினம் நகராட்சியின் மொத்த பரப்பளவு 14.92 ச.கி.மீ ஆகும். சாலைகளின் மொத்த நீளம் 123.274 கி.மீ ஆகும். நாகப்பட்டினம் நகராட்சியில் பாதாள சாக்கடை திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. பாதாள சாக்கடை திட்டப்பணியில் 84.381 கி. மீட்டர் நீளத்திற்கு கழிவு நீர் பிரதான குழாய்கள் அமைக்கப்பட்டுள்ளது. இவற்றில் 15 நீரேற்று நிலையங்கள் மற்றும் உந்து நிலையங்கள் உள்ளது. தற்போது நாகப்பட்டினம் மேலக்கோட்டைவாசல் உரக்கிடங்கிற்கு அருகாமையில் உள்ள கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையமானது தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் பராமரிப்பில் இயங்கி வருகிறது. தற்போது மேற்படி பராமரிப்பு பணிக்கான காலக்கெடு முடிவுற்றக் காரணத்தினால் நகராட்சி வசம் ஒப்படைப்பு செய்திட கடிதங்கள் வரப்பெற்றுள்ளது. அதனைத்தொடர்ந்து முதற்கட்டமாக கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தினை உரிய அலுவலர்களால் ஆய்வு செய்யப்பட்டது. மேற்படி கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தினை நகராட்சியின் மூலம் இயக்குவதற்கு போதிய தகுதியான மற்றும் தகுதியற்ற தொழில்நுட்ப பணியாளர்கள் நகராட்சியில் இல்லை என்ற விவரம் தெரிவிக்கப்படுகிறது. எனவே பாதாள சாக்கடை திட்டத்திற்கு உண்டான பணிகளை மேற்கொள்ள தினக்கூலி அடிப்படையில் மாவட்ட ஆட்சியர் நாகப்பட்டினம் அவர்களால் நிர்ணயம் செய்யப்பட்ட தினக்கூலி பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் முதற்கட்டமாக 6 மாதக் காலத்திற்கு தொழில்நுட்ப தகுதி உடைய மற்றும் தகுதியற்ற பணியாளர்கள் அமர்த்திட ஆகும் உத்தேச மதிப்பீடு ரூ.10.00இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>
அலுவலக குறிப்பு<br>
1. மன்றம் அனுமதி வழங்கலாம்<br>
2. 2023–24 ம் ஆண்டின் மாவட்ட ஆட்சியர் அவர்கள் நிர்ணயம் செய்யப்பட்ட தொகையை வழங்க மன்றம் அனுமதி வழங்கலாம்<br>
3. இச்செலவினத்தினை பாதாளசாக்கடை நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.<br><br>
ந.க.எண். 1107/2023/இ1</td>
<td>தீர்மானம் எண்.14<br>அ. கு<br>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td>12–01–2024</td>
<td>பொருள் எண்.15<br>நாகப்பட்டினம் நகராட்சிக்குட்பட்ட நாகூர் சில்லடி பீச் அருகில் தர்சமயம் தோட்டக்கலை துறையினரால் நெய்தல் பூங்கா அமைக்கும் பணி தொடங்க இருக்கிறது. மேற்கண்ட இடத்தை மாவட்ட ஆட்சியர் மற்றும் மாவட்ட வருவாய் அலுவலர் அவர்கள் ஆய்வு செய்ததில் பூங்கா அமைக்கப்படும் பகுதியில் குறுக்கே கழிவுநீர் கால்வாய் அமைக்க அறிவுறுத்தியதால் மாற்று கழிவுநீர் கால்வாய் அமைக்'கும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.5.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>
அலுவலக குறிப்பு<br>
1. மன்றம் அனுமதி வழங்கலாம்<br>
2. மேற்படி பணிக்கு உண்டான செலவினத்தை நகராட்சியின் நிதிநிலையினை கருத்தில் கொண்டு பாதாள சாக்கடை நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.<br><br>
ந.க.எண். /2023/இ1</td>
<td>தீர்மானம் எண்.15<br>அ. கு<br>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

<table>
<tr><td>12-01-2024</td><td>பொருள் எண்.16<br>நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் நாகப்பட்டினம் நகராட்சிக்குட்பட்ட கடற்கரை பகுதிகளை இயற்கை சூழலுடன் மேம்படுத்தவும், நாகப்பட்டினம் புதிய கடற்கரை மற்றும் நாகூர் சில்லடி கடற்கரையை மேம்படுத்தவும் அதற்கான நிபுணத்துவம் வாய்ந்த ஆலோசகர்கள் கொண்டு விரிவான திட்ட மதிப்பீடு சமர்ப்பிக்க அறிவுறுத்தப்பட்டதனை தொடர்ந்து மேற்படி பணிக்கான தகுதி வாய்ந்த ஆலோசர்களை நியமித்து விரிவான திட்ட மதிப்பீட்டு அறிக்கையினை TNUIFSL சென்னை நிறுவனத்தின் மூலம் செயல்படுத்தப்படும் Project Development Grant Fund (PDGF) நிதியின் மூலமே பணி மேற்கொள்ள வேண்டுமாய் கேட்டுக்கொள்ளப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு — 1. மன்றம் அனுமதி வழங்கலாம்<br>ந.க.எண்.3975/2022/இ1</td><td>தீர்மானம் எண்.16<br>அ. கு<br>அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td>12-01-2024</td><td>பொருள் எண்.17<br>வருகின்ற ஜனவரி 26 ம் நாளில் நடைபெறவுள்ள குடியரசு தின விழாவினை முன்னிட்டு இந்நகராட்சியின் அலுவலக வளாகத்தில் விழாவிற்கு ஒலிஒளி அமைப்புகள் அமைக்கும் பணிக்கு தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ. 0.15 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு — 1. மன்றம் அனுமதி வழங்கலாம்; 2. மேற்படி பணிக்கு உண்டான செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்<br>ந.க.எண்.38/2023/இ1</td><td>தீர்மானம் எண்.17<br>அ. கு<br>அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td>12-01-2024</td><td>பொருள் எண்.18<br>நாகப்பட்டினம் நகராட்சிக்குட்பட்ட அக்கரைப்பேட்டை – வேளாங்கண்ணி சாலையில் கி.மீ.0/2ல் நாகூர் மற்றும் நாகப்பட்டினம் இரயில் நிலையங்களுக்கு இடையில் கி.மீ.77/700-800ல் கடவு எண் 48ல் இரயில்வே மேம்பாலம் கட்டும் பணி நெடுஞ்சாலை துறையின் மூலம் நடைபெற்று வருகிறது. மேற்படி திட்டப்பணி மேற்கொள்ளப்படுகையில் அக்கரைப்பேட்டை செல்லும் சாலை, நேதாஜி சாலை மற்றும் முதலாம் கடற்கரை சாலை இணைத்து அமைக்கப்பட இருக்கும் இரயில்வே மேம்பாலம் கட்டும் பணி குறித்து நெடுஞ்சாலை துறை கோட்டப் பொறியாளர், உதவிக் கோட்டப் பொறியாளர் மற்றும் நகராட்சி உதவி செயற்பொறியாளர் அவர்களால் 29.12.2023 அன்று நேரடியாக ஆய்வு செய்யப்பட்டது. மேற்கண்ட ஆய்வின் போது நெடுஞ்சாலை துறை அலுவலர்களால் இரயில்வே மேம்பாலம் பணி நடைபெறுவதற்கு இடையூராக உள்ள நகராட்சிக்கு சொந்தமான அம்மா உணவகம், பழைய பேருந்து நிறுத்தம், பொதுக் கழிப்பறை மற்றும் வணிக வளாகம் ஆகியவற்றை அப்புறப்படுத்திதர அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேற்காணும் நகராட்சிக்கு சொந்தமான கட்டிடங்களை இடித்து அப்புறப்படுத்தும் பணிக்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு — 1. மன்றம் அனுமதி வழங்கலாம்; 2. மேற்கண்ட இரயில்வே மேம்பாலம் கட்டுவதற்கு இடையூராக உள்ள நகராட்சிக்கு சொந்தமான கட்டிடங்களை இடித்து அப்புறப்படுத்தும் பணிக்கு உண்டான செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்<br>**ந.க.எண்.1558/2022/இ1**</td><td>தீர்மானம் எண்.18<br>அ. கு<br>அனுமதிக்கப்பட்டது</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| 12–01–2024 | பொருள் எண்.19<br>நாகப்பட்டினம் நகராட்சிக்கு சொந்தமான அலுவலக கட்டிட வளாகங்கள், குடிநீர் நீர்தேக்க தொட்டிகள், உந்து நிலையங்கள் மற்றும் பாதாள சாக்கடை உந்து நிலையங்களில் போதுமான மின்விளக்கு வசதிகள் இல்லாத நிலையில் உள்ளதால் பணிபுரியும் பணியாளர்களின் நலனை கருத்தில் கொண்டு மின் விளக்குகள் மற்றும் மின் உபகரணங்கள் புதிதாக வாங்கி பொறுத்தி கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ.1.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு<br>1 மன்றம் அனுமதி வழங்கலாம்<br>2 மேற்படி பணிக்கு உண்டான செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்<br><br>ந.க.எண். /2023/இ1 | தீர்மானம் எண்.19<br>அ. கு<br>அனுமதிக்கப்பட்டது |
| 12–01–2024 | பொருள் எண்.20<br>நாகப்பட்டினம் நகராட்சியில் கல்வி நிதி 2022 – 23ன் கீழ் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 13 பால்பண்ணைச்சேரி தொடக்கப்பள்ளியில் உள்ள கட்டடம் பழுது சீர்செய்யும் பணியினை மதிப்பீடு ரூ.5.00 இலட்சத்திற்கு பணியினை மேற்கொள்ள இந்நகர்மன்ற தீர்மானம் எண் 110 நாள் 11.04.2022ல் அனுமதி வழங்கப்பட்டது . அதனைத்தொடர்ந்து 02.06.2022ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளதில் இந்நகராட்சி ஒப்பந்ததாரர் திரு.ஆர்.பி.சந்திரகாந்தன், நாகப்பட்டினம் என்பவரால் மதிப்பீட்டைவிட 0.03 சதவிகிதம் குறைவாக வழங்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று, 30.06.2022ல் இந்நகர்மன்ற தீர்மான எண் 187 நாள் 30.06.2022ன் படி பணியினை உடன் மேற்கொள்ள வேலை உத்தரவும் வழங்கப்பட்டது.<br>மேற்படி ஒப்பந்ததாரரால் மேற்கொள்ளப்பட வேண்டிய நகராட்சி தொடக்கப்பள்ளி பராமரிப்பு பணியின் அவசியத்தை பலமுறை அறிவுறுத்தியும் இதுநாள் வரை பணி துவங்கப்படாமல் உள்ளதும், ஒப்பந்தப் பணியின் காலக்கெடு முடிவடைந்து ஓராண்டு காலமாகியும் இதுவரை பணி மேற்கொள்ளாமல் உள்ளதற்கு விரைந்து பணியினை துவங்கிட பலமுறை நேரிலும் மற்றும் தொலைப்பேசியிலும் அறிவுறுத்தப்பட்டும் எவ்வித முன்னேற்றமும் இல்லாதது , இந்நிலையில் ஒப்பந்ததாரரால் பணியினை மேற்கொள்ள விருப்பம் இல்லாமையென தெள்ள தெளிவாக தெரியவருகிறது. எனவே மேற்படி ஒப்பந்ததாரரால் மேற்கொள்ளப்பட வேண்டிய ஒப்பந்த பணியானது ஒப்பந்த விதிகளின் வழிகாட்டு நெறிமுறைகளின்படி ரத்து செய்வதற்கும் மற்றும் பணியினை மேற்கொள்வதற்கான தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு<br>1 மன்றம் அனுமதி வழங்கலாம்<br>2 மேற்படி ஒப்பந்தப்பணியினை ஒப்பந்த விதிகளின் வழிகாட்டு நெறிமுறைகளின்படி ரத்து செய்வதற்கும் மற்றும் மறு ஒப்பந்தப்புள்ளி கோரிடவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>ந.க.எண்.1037/2022/இ1 | தீர்மானம் எண்.20<br>அ. கு<br>அனுமதிக்கப்பட்டது |

12–01–2024

பொருள் எண்.21

நாகப்பட்டினம் நகராட்சி நாகூர் ஆண்டவர் கந்தூரி திருவிழா எதிர்வரும் 14.12.2023ஆம் தேதி முதல் 27.12.2023ஆம் தேதி வரை நடைபெறுவதை முன்னிட்டு பொதுசுகாதாரப்பணிகளுக்கு தேவையான டிப்பர் டிராக்டர் கிருமிநாசினிகள் மற்றும் தளவாடப்பொருள்கள் தருவித்து கொள்வதற்கு இந்நகர்மன்றம் தீர்மானம் எண்.242, நாள்.08.11.20232இல் அனுமதி வழங்கப்பட்டதை தொடர்ந்து 30.11.2023ஆம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டுள்ள விவரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மட்டும் வரப்பெறப்பட்டுள்ளது.

| வ. எண் | பொருட்களின் விவரம் | எண்ணம் | R.விஜயக்குமார் வடபாதி –610102 | ஸ்ரீ சரவணாஹார்டுவேர்ஸ் குத்தாலம்-609 801 |
|---|---|---|---|---|
| 1 | Aluminium Baskets | 1No | 559.90 | 560.00 |
| 2 | Brooms | 1No | 57.55 | 57.60 |
| 3 | Spade with wooden handles | 1No | 749.75 | 750.00 |
| 4 | Drainage silt scraper ( Surandi) | 1No | 575.75 | 576.00 |
| 5 | Bleaching Powder | 1kg | 47.49 | 47.50 |
| 6 | Slacked lime | 1kg | 10.75 | 10.80 |
| 7 | Phenyl (B & W) | 1lit | 79.99 | 80.00 |
| 8 | Dichlorawas 76 % EC ( Nuvan) | 1lit | 2679.00 | 2680.00 |
| 9 | Petrol | 1lit | 130.00 | 131.00 |
| 10 | Diesel | 1lit | 110.00 | 111.00 |
| 11 | Broom Stick Jadu | 1No | 599.99 | 600.00 |
| 12 | Latrine sign board | 1No | 590.00 | 600.00 |
| 13 | Banners | 1No | 259.00 | 260.00 |
| 14 | Hire Tipper Tractors | 1No | 67475.00 | 67500.00 |
| 15 | Crow Bar | 1No | 999.00 | 1000.00 |
| 16 | Arival | 1No | 674.00 | 675.00 |
| 17 | Iron Buckets | 1No | 624.50 | 625.00 |
| 18 | Eachern Baskets | 1No | 179.75 | 180.00 |
| 19 | Road Brush | 1No | 184.99 | 185.00 |
| 20 | Mask | 1No | 12.99 | 13.50 |
| 21 | Hand Fork | 1No | 266.60 | 267.00 |
| 22 | NMC Symbols Reflector Jacket | 1No | 159.99 | 161.00 |
| ஆக கூடுதல் தொகை ரூ. | | | 77025.99 | 77070.40 |
| | | | (+) அதிகம் | (–) குறைவு |

சரவணா ஹார்டுவேர்ஸ் நிறுவனத்தார் மதிப்பீட்டுவிலை விகித்திற்கு குறைத்து விநியோகம் செய்ய கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளியை ஏற்று, பணியின் அவசர அவசியத்தை கருதி நகரமன்றதலைவரின் அனுமதி பெற்று விநியோக ஆணை வழங்கியதற்கும், மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | | |
|---|---|---|
| அலுவலக குறிப்பு | 1 | பணியின் அவசர அவசியத்தை கருதி நகர்மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்றதலைவரின் அனுமதி பெற்று ஸ்ரீ சரவணா ஹார்டுவேர்ஸ் நிறுவனத்தாரருக்கு விநியோக ஆணை வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம். |

ந.க.எண்:4446/2023/H1

தீர்மானம் எண்.21

அ. கு

அனுமதிக்கப்பட்டது

| | | |
|---|---|---|
| 12–01–2024 | பொருள் எண்.22<br>நாகப்பட்டினம் நகராட்சியில் வார்டு 1 முதல் 36 வரை உள்ள வார்டுகளுக்கு மக்களுடன் முதல்வர் முகாம் திட்டத்தின் கீழ் 6 திருமண மண்டபங்கள் 1 பள்ளி வளாகத்தில் நடைபெற்றதில் பிளக்ஸ்போர்டு, நோட்டீஸ், ஆட்டோ விளம்பரம் செய்தல், கணிணி வாடகை,இணைதளவசதி மற்றும் அலுவலர்களுக்கு உணவு வழங்கியதற்கான உத்சே செலவு ரூ.5.00 இலட்சம் மன்றத்தின் அனுமதிக்கு.<br>**அலுவலக குறிப்பு**<br>1 மன்றம் அனுமதிக்காலம்<br>2 மேற்படி செலவினத்தை நகராட்சி பொதுநிதிலிருந்து வழங்கலாம்.<br>ந.க.எண்.4762/2023/எச் 2 | தீர்மானம் எண்.22<br>அ. கு<br>அனுமதிக்கப்பட்டது |
| 12–01–2024 | பொருள் எண்.23<br>**<u>நகர்மன்ற உறுப்பினர் திரு.த.கமலநாதன் அவர்களால் கொண்டுவரப்படும் தீர்மான நகல்.</u>**<br>35–வது வார்டில் வங்ககடல் மீன் தொழிலாளர் பேரவையின் உறுப்பினர்களான நலிவடைந்த மீனவ பெண்களின் வாழ்வாதார மேம்பாட்டிற்காக அமைக்கப்பட உள்ள தரம் உயர்த்தப்பட்ட கருவாடு உற்பத்தி தளம் அமைக்க இடம் தேவைப்படுவதால் நகராட்சியின் 35–வது வார்டு பகுதிக்கு உட்பட்ட சேவாபாரதி மீன்பிடி துறைமுக இறங்கு தளத்தை ஒட்டிய பகுதி வார்டு எண்–2, பிளாக் எண்–2, நகரளவு எண்–24/1 –ல் கருவாடு உற்பத்திதளம் அமைப்பதற்கு 650 ச.அடி இடம் ஒதுக்கி தருமாறு இத்தீர்மானம் மூலம் கேட்டுக்கொள்கிறேன். | தீர்மானம் எண்.23<br>தீர்மாணிக்கப்பட்டது |

/உண்மை நகல்/

(ஒம்) இரா.மாரிமுத்து
நகரமன்ற தலைவர்